செ.வெ.எண்:34/2017 நாள்:11.10.2017

**சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், அதப்படக்கி கிராமத்தில் 167 பயனாளிகளுக்கு ரூ.12,85,000/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.**






சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், அதப்படக்கி கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 167 பயனாளிகளுக்கு ரூ.12,85,000/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வருவாய்த்துறை மூலம் 48 பயனாளிகளுக்கு வாரிசு சான்றிதழ், பட்டா மாறுதல் ஆணை, வீட்டுமனைப் பட்டா, 35 கிலோ அரிசு பெறுவதற்கான அனுமதி ஆணை, முதியோர் உதவித் தொகைக்கான ஆணை, திருமண உதவித் தொகை, உழவர் அட்டை, இயற்கை மரண உதவித் தொகை ஆணைகளையும், வேளாண்மைத் துறையின் மூலம் 3 பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள், 3 பயனாளிகளுக்கு மண்வள அட்டைகளையும், தோட்டக்கலைத் துறையின் மூலம் 1 பயனாளிக்கு ரூ.4,968/- மானியத்தில் மா அடர் நடவினையும், கால்நடைப் பராமரிப்பு மூலம் 3 பயனாளிகளுக்கு தீவன சோளம், 3 பயனாளிகளுக்கு தாது உப்பினையும், 26 பெண்களுக்கு தலா 4 ஆடுகள் வீதம் (ரூ.12,950/-) ரூ.3,36,700/- மதிப்பிலான விலையில்லா வெள்ளாடுகளையும், தொழிலாளர் நல அலுவலகம் மூலம் 50 பயனாளிகளுக்கு உறுப்பினர் பதிவு புதிய அட்டைகளையும், மகளிர் திட்டம் சார்பில் நலிவுற்றோர் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 5 பயனாளிகளுக்கு தலா ரூ.5,000/- வீதம் ரூ.25,000/-க்கான காசோலைகளையும், 3 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ5,95,000/- மதிப்பில் தனிநபர் கடன் பெறுவதற்கான ஆணைகளையும், இந்தியன் வங்கியின் மூலம் 15 பயனாளிகளுக்கு ரூ.20,000/- வீதம் ரூ.3,00,000/- மதிப்பிலான தனிநபர் கடன் ஆணைகளையும் ஆக மொத்தம் 167 பயனாளிகளுக்கு ரூ.12,85,000/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையுரையில் தெரிவித்துள்ளதாவது,

அரசு மக்களை தேடிச் செல்வது முன்னதாக மனுக்களைப் பெறுவது மக்கள் தொடர்பு முகாமின் நோக்கமாகும். இது ஒரு அருமையான

திட்டமாகும். டெங்கு விழிப்புணர்வில் பெண்களின் பங்கு அதிகம் இருக்க வேண்டும் என்றும், தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை வாரம் ஒருமுறை சுத்தம் செய்து நல்லமுறையில் பராமரித்து வந்தால் டெங்கு காய்ச்சல் இருந்து விடுபடலாம் என்றும், காய்ச்சல் வரும்பட்சத்தில் தாங்களே மாத்திரை சாப்பிடாமல் அருகில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சென்று நிலவேம்பு கசாயத்தை அருந்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

நமது மாவட்ட மக்கள் வேளாண்மை தொழிலில் அதிக அளவில் ஈடுபடுவதால் பயிர் காப்பீடு செய்து கொள்ளுமாறும், ஒவ்வொரு புதன்கிழமையும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பயிர் காப்பீடு செய்வதற்கான சிறப்பு முகாம் நடைபெற்று வருகின்றது. இந்த முகாமில் வருவாய்த்துறையின் சார்பில் வழங்கப்படும் அடங்கலை வாங்கி பயிர் காப்பீடு செய்து பயடையுமாறு தெரிவித்தார்.

பண்ணைக்குட்டைகள் அமைத்து தேவையான மழைநீரை சேமித்து பருவகாலத்தை தவிர்த்து பிற நாட்களில் அதனை கொண்டு மாற்றுப் பயிர்களை விளைவித்து பயனடையுமாறும், மண்புழு உழவர்களின் நண்பன். மண் வளமாக இருக்க உதவுவது மண்புழு. ஆகவே மண்புழு உரத்தை பயன்படுத்தி விவசாயப் பணிகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக, அதப்படக்கி பெரியகண்மாய் சாகுபடி பரப்பு, பயிர் சாகுபடி ஒத்திசை, தேசிய உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வரிசை நெல் விதைப்பு, பண்ணைக்குட்டை செயல் விளக்கம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள், தனிநபர் கழிவறைகள், ஆதிதிராவிடர் நல விடுதி பராமரிப்பு பணிகள், அரசு உயர்நிலைப்பள்ளி ஆகிய இடங்களை ஆய்வு செய்து பல்வேறு இடங்களில் மரம் நடும் பணிகளையும் மேற்கொண்டார்.

அதப்படக்கி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ‘‘விடுதலை நாள் விழா’’ என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற 3 மாணவச் செல்வங்களுக்கு நினைவுப் பரிசுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி, அனைத்துத்துறை உயர் அலுவலர்கள், காளையார்கோவில் வட்டாட்சியர்கள் திருமதி.சந்தானலெட்சுமி, திரு.பால்பாண்டி மற்றும் வருவாய்த்துறை பணியாளர்கள், ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.